செய்தி வெளியீடு எண் : 1298 நாள் : 03.07.2023

**மாண்புமிகு வேளாண்மை–உழவர் நலத்துறை அமைச்சர்**
**திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் அவர்கள் தலைமையில் வேளாண்மைத் துறை திட்டங்கள் தொடர்பான ஆலோசனைக் கூட்டம்**

*******

இன்று (03.07.2023) தலைமைச் செயலகத்தில் மாண்புமிகு வேளாண்மை–உழவர் நலத்துறை அமைச்சர் திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் அவர்கள் தலைமையில் வேளாண்மைத் துறை திட்டங்கள் மற்றும் தக்காளி & இதர காய்கறிகள் விலை உயர்வு தொடர்பான ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

உழவர் சந்தையில் இன்றைய தினம் 1,592 மெட்ரிக் டன் தக்காளி விற்பனை செய்யப்பட்டுள்ளது. மேலும், தக்காளி பயிரிடும் பரப்பை அதிகப்படுத்துவது தொடர்பாகவும், வருங்காலங்களில் தக்காளி மற்றும் இதர காய்கறிகளின் விலையேற்றம் கோடை காலத்திலும் நிகழாதவண்ணம் முன்கூட்டியே தொடர் நடவடிக்கை எடுக்க இன்றைய கூட்டத்தில் அறிவுரை வழங்கப்பட்டது.

இக்கூட்டத்தில், வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசுச் செயலாளர் திரு.சி.சமயமூர்த்தி, இ.ஆ.ப., சர்க்கரைத் துறை ஆணையர் திரு. சி. விஜய ராஜ்குமார், இ.ஆ.ப., வேளாண்மைத் துறை ஆணையர் முனைவர். எல். சுப்ரமணியன், இ.ஆ.ப., தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை இயக்குநர் டாக்டர். ஆர். பிருந்தா தேவி, இ.ஆ.ப., வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறை இயக்குநர், முனைவர். எஸ்.நடராஜன், இ.ஆ.ப., ஆகியோர் கலந்து கொண்டனர்.

**வேளாண்மை –உழவர் நலத்துறை அமைச்சர்**

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :
tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in